# தமிழர் வாழும் சகல பகுதிகளிலும் தமிழர் கூட்டணி போட்டியிடும்

பக்கங்கள் 6 விலை சதம் 30 ★★

# ஈழநாடு

The EELA NADU

மலர் 18 தை 25 லயா 17 இதழ் 358

யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 7-2-77

மூதூர், ஞாயிறு

தமிழ்ப்பகுதிகளின் சகல தொகுதிகளிலும் இலங்கையின் தமிழர் கணிசமாக வாழும் தொகுதிகளிலும் எதிர்வரும் பொதுத் தேர்தலில் போட்டியிடுவது என்று மூதூரில் கூடிய தமிழர் விடுதலைக்கூட்டணியின் நடவடிக்கைக்குழு தீர்மானித்துள்ளது.

எதிர்வரும் பொதுத்தேர்தலை ஒரு சர்வஜன வாக்கெடுப்பாக நடத்துவதெனவும் அங்கு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. தேர்தலின்போது பணம் தொடர்பான விடயங்கள் குறித்தும் ஆராயப்பட்டு முடிவுகள் எடுக்கப்பட்டன. தனிநாட்டுக் கொள்கையை வைத்தே தேர்தலில் போட்டி. விடுதலை திரு. ரேசத் தீ... பான் தலைமையில் நடைபெற்ற இக்குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. (உ-ஆ)

# தமிழர் பிரச்னைகளை அரசு நீக்கத் தயாராய் உள்ளதாம்

## இதற்கு ஒத்துழைப்புத் தர வேண்டும் என்கிறார் அமைச்சர் இரத்னயக்கா

யாழ்ப்பாணம், ஞாயிறு

நூற்றுக்கணக்கான வருடங்களாக வாழ்ந்துவந்த சிங்கள தமிழ் மக்கள் மத்தியில், இறுகிய பிரச்னைகள் தோன்றியிருப்பதால் ஒருவர் மீது ஒருவருக்கு நம்பிக்கை குறைந்துள்ளது. இத்தவறை அரசு திருத்தியமைக்க தயாராக இருக்கிறது. இதற்கு தமிழர் ஒத்துழைப்பு முக்கியம் தேவையாக இருக்கிறது.

யாழ்ப்பாணம், மத்திய பஸ் நிலையத்தில் அமைக்கப்பட்ட புதிய காரியாலயத்தை திறந்து வைத்த போக்குவரத்து அமைச்சர் திரு. கே. பீ. இரத்னாயக்க மேற்கண்டவாறு கூறினார்.

யாழ்ப்பாணம் எம். பி. திரு. சி. எக்ஸ். மார்டின் தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில், இ. போ. ச. தலைவர் திரு. ஜே. சி. டி. கொத்தலாவ, நியமன எம். பி. திரு. எம். சி. சுப்பிரமணியம் யாழ் அரசாங்க அதிபர் திரு. டபிள்யூ. ஏ. எம். விஜயபாலா ஆகியோர் கலந்துகொண்டனர்.

அமைச்சர் மேளவாத்தியம், 'பாண்ட்' வாத்திய சகிதம் மேடைக்கு ஊர்வலமாக அழைத்துவரப் பட்டார்.

சகல பஸ்களிலும் அமைச்சர் திரு. இரத்தினாயக்கா, இ. போ. ச. தலைவர் திரு. கொத்தலாவல, யாழ்ப்பாணம் எம். பி. திரு. சி. எக்ஸ். மார்டின் ஆகியோரின் உருவப்படங்கள் ஒட்டப்பட்டிருந்தன.

### பிரச்னைகளை அரசு உணர்ந்துள்ளது

அமைச்சர் இரத்னாயக்கா மேலும் கூறியதாவது:

சிங்கள தமிழ் மக்கள் மத்தியில் உள்ள பிரச்சனைகளை தீர்த்து வைக்க வேண்டும் என்பது அரசுக்கு விளங்கியிருக்கிறது. நாட்டில் பொது மக்கள் யாவரும் ஒற்றுமையாக வாழ வேண்டும்.

தமிழ் மக்களின் பிரச்னைகளை தீர்க்க வெகுவிரைவில் அரசு எடுக்கவிருக்கும் நடவடிக்கைக்கு தமிழரின் ஒத்துழைப்பு முக்கியம் தேவைப்படுகிறது.

தமிழர் சிங்களவர் மத்தியில் வித்தியாசம் இருந்தால் அதைநீக்கி ஒற்றுமையை ஏற்படுத்த அரசு தயாராக இருக்கிறது.

### அரசு மீது நம்பிக்கை அவசியம்

அரசுமீது சிறுபான்மை மக்கள் நம்பிக்கைவைக்கவேண்டும். இல்லையேல் எங்கள் சேவைகளால் பயனில்லாமல் போய்விடும்.

உணவு, வேலையில்லாப் பிரச்னை வீட்டுப் பிரச்னை காணிப் பிரச்னைகளை, சிங்களவருக்கு ஒரு மாதிரியும் தமிழருக்கு ஒருமாதிரியும் அரசு செய்யவில்லை. எல்லாருக்கும்

(6-ம் பக்கம் பார்க்க)

## கூட்டணி நியமனக்குழு: ஐவர் தெரிவு

மூதூர், ஞாயிறு

தமிழர் விடுதலைக் கூட்டணி அபேட்சகர் நியமனக்குழுவில் ஐவர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

இக்குழுவில் கூட்டணித் தலைவர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் கூட்டணி செயலதிபர்கள் திரு. ஏ. அமிர்தலிங்கம், திரு. எம். சிவசிதம்பரம், திரு. ரேஞ்டிவால், திரு. டாக்டர் உதுமாலெவ்வை ஆகியோர் இக்குழுவில் இடம் பெற்றுள்ளனர்.

இக்குழுவின் ... ராக திரு. ஏ. அமிர்தலிங்கம் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

தமிழர் விடுதலைக்கூட்டணி நடவடிக்கைக்குழுவின் அடுத்த கூட்டம் அக்கரைப்பற்றில் மார்ச் 3-ம், 4-ம் திகதிகளில் நடைபெறும்.

தமிழர் விடுதலைக் கூட்டணி

(6-ம் பக்கம் பார்க்க)

## சுவீப் முடிவுகள்

கொழும்பு, ஞாயிறு

இன்று அதிர்ஷ்டம் பார்க்கப்பட்ட 601-வது தேசிய சுவீப்பில் பரிசு பெறும் முதல் 3 டிக்கட்டுகள் விபரம் வருமாறு:

1-வது பரிசு

14 Y 0442

ரூபா 100,000

2-வது பரிசு

19 P 0222

ரூபா 40,000

3-வது பரிசு

19 K 0650

ரூபா 10,000

[ஆ]

## ஒரிசா முன்னாள் முதல்மந்திரி மீது விசாரணைக் குழு!

புதுடில்லி, பெப் 6

முன்னாள் ஒரிசா முதல் மந்திரி திருமதி நந்தினி சத்பதிக்கு எதிராக சுமத்தப்பட்ட பல்வேறு குற்றங்கள் சம்பந்தமாக விசாரணை செய்யும் பொருட்டு விசாரணைக் குழுவொன்று நியமிக்கப் பட்டுள்ளது.

இந்திரா காங்கிரஸின் மூத்த உறுப்பினர்களில் ஒருவரான திருமதி நந்தினி சத்பதி காங்கிரஸ் கட்சியிலிருந்து அமைச்சர் ஜெகஜீவன் ராமுடன் சேர்ந்து வெளியேறியதைத் தொடர்ந்து கட்சியிலிருந்து இவர் நீக்கப்பட்டு விட்டதாக அறிவிக்கப்பட்டது தெரிந்ததே.

ஜெகஜீவன்ராம் அமைத்துள்ள ஜனநாயக காங்கிரஸின் பொதுச் செயலாளராக திருமதி நந்தினி சத்பதி இருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது. [ஆ]

# 4000 ரூ. லஞ்சம்பெற்றாராம்!

## தொண்டமானாறு மீன்பிடி இன்ஸ்பெக்டர் றிமாண்டில்

யாழ்ப்பாணம், திக.

வடபகுதியில் உள்ளமீன்பிடி இலாகா இன்ஸ்பெக்டர் ஒருவர் கொழும்பில் இருந்துவந்த லஞ்ச கமிஷன் அதிகாரிகளின் வலையில் சிக்கி றிமாண்டில் வைக்கப்பட்டுள்ளார்.

தொண்டமானாறு மீன்பிடி இலாகா இன்ஸ்பெக்டரான எஸ். நவரத்தினம் என்பவரே இவ்விதம் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளவராவார்.

கொழும்பில் இருந்து வந்த லஞ்சக் கமிஷனைச் சேர்ந்த உதவிப் பொலிஸ் சுப்பிரின்டென்ட் ஜுலுப் டி. எம். டி. மஹத், இன்ஸ்பெக்டர்கள் திரு. வி. நரேந்திரா, திரு. எஸ். ஏ. கந்தசாமி கான்ஸ்டபிள் செல்லராஜா ஆகியோர் அடங்கிய கோஷ்டியே காங்கேசன்துறை வாடி வீட்டில் வைத்து லஞ்சம் சம்பந்தமாக இவரைக்கைது செய்தது.

தொண்டமானாற்று பெரிய கடற்கரைப் பகுதியைச் சேர்ந்த செல்வரத்தினம் என்பவருக்கு அரசாங்கத்திடம் இருந்து மீன்பிடி வள்ளம் ஒன்று பெற்றுத் தருவதாகவும் அதற்கு 4000 ரூபா லஞ்சமாகத் தரும்படியும் பிரஸ்தாப சந்தேநபர் செல்வரத்தினத்திடம் கேட்டு அத்தொகையை காங்கேசன்துறை வாடிவீட்டில் வைத்து அவரிடம் இருந்து வாங்குகையில் லஞ்சக் கமிஷன் அதிகாரிகள் கோஷ்டியால் கையும்,மெய்யுமாகக் கைது செய்யப்பட்டதாக கூறப்படுகிறது.

இந்நபர் மல்லாகம் வாவட்ட நீதவான் திரு. எம். டி. ஜேசுரத்தினம் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டு றிமாண்டில் வைக்கப்பட்டுள்ளார். [உ]

## வீடமைப்புக் கடனை வங்கியில் கட்ட ஏற்பாடு

வண்ணார்பண்ணை, ஞாயிறு

யாழ்ப்பாணம் தேசிய வீடமைப்பு இலாகாவின் பெற்ற கடன்களைத் தவணை முறையில் கட்டி வரும் கடன்பெற்றவர்கள் இம்மாதம் முதல் தமது கட்டுப்பணங்களை இலங்கை வங்கியின் யாழ்ப்பாணக் கிளையில் கட்டுவதற்கான வசதிகள் செய்யப்பட்டுள்ளன என்று தேசிய வீடமைப்பு உதவி ஆணையாளர் திரு. எம். இராஜரத்தினம் அறிவித்துள்ளார்.

இதுசம்பந்தமான சுற்றுநிருபம் ஒன்றை திரு. இராஜரத்தினம் இலாகாவிடம் பணம் பெற்றவர்களுக்கு அனுப்பி வைத்துள்ளார்.

இத்திட்டத்தின்மூலம் இனி காரியாலயத்துக்குச் சென்று பணம் கட்டவேண்டிய தேவைகள் கடனாளிகளுக்கு இனிமேல் இருக்காது. சிரமமின்றி வங்கியிலேயே தமது கடன்களைக் கட்ட வசதியேற்பட்டுள்ளது. (ஆ)

## ஜெகஜீவன்ராமின்கட்சி ரஷ்ய கம்யூனிஸ்டுடன் இணையும்

புதுடில்லி, பெப். 6

இந்திரா அரசிலிருந்து ராஜினாமா செய்து விட்டு வெளியேறிய முன்னாள் மத்திய உணவு அமைச்சர் திரு. ஜெகஜீவன்ராம் அமைத்துள்ள ஜனநாயக காங்கிரஸ் என்ற புதிய கட்சி மாஸ்கோசார்பு கம்யூனிஸ்ட் கட்சியுடன் இணைய விருப்பதாக அறிவித்துள்ளது.

எதிர்க்கட்சிக் கூட்டணியான ஜனதா கட்சியுடன் சேரவிருப்பதாக ஜனநாயக காங்கிரஸ் ஏற்கனவே அறிவித்திருந்த போதிலும் தற்போது மாஸ்கோ கம்யூனிஸ்ட் கட்சியுடன் சேரவுள்ளதாக அறிவித்துள்ளது.

மாஸ்கோசார்பு கம்யூனிஸ்ட் கட்சிக்கும் பிரதமர் இந்திரா காந்திக்குமிடையில் அண்மை

(6-ம் பக்கம் பார்க்க)

# சிறிய கட்சிகள் சேர்ந்த ஜனதா கட்சி கொள்கை என்ன?

## பிரதமர் இந்திரா கேள்வி

புதுடில்லி, பெப். 6

"சிறிய கட்சிகள் ஒன்று சேர்ந்து ஜனதாக்கட்சி என்று ஒரு கட்சியை ஆரம்பித்திருக்கின்றன. இக்கட்சி எப்படி அரசாங்கத்தை அமைக்கப்போகிறது? இக்கட்சியின் அரசியல் கொள்கைகள் என்ன என்பது குறித்து எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது" என்று பாரதப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி கூறினர்.

புதுடில்லியில் நேற்று ஆரம்பமான ஆறும் காங்கிரஸின் தேர்தல் பிரசாரக்கூட்டத்தில் திருமதி காந்தி பேசினர்.

### ஜனநாயகம் தொடர்ந்து காக்கப்படும்

அவர் தமது உரையில் மேலும் சொன்னதாவது:

"நாட்டு மக்கள் முன்னிலையில் சகல பிரச்னைகளையும் சமர்ப்பிக்கும் பொருட்டே மார்ச் மாதத்தில் பொதுத் தேர்தல் நடைபெறுமென்று நான் அறிவித்தேன். பாரதத்தில் ஜனநாயகம் இதுவரை காக்கப்பட்டு வந்துள்ளது. தொழிற்சாலைகள் மூடப்பட்டு, பொருட்கள் பற்றாக்குறை ஏற்பட்டு, பாராளுமன்றத்தில் குழப்பநிலை உருவாகவேண்டுமென்பது சிலரது கருத்தாக உள்ளது. இது எனக்கு வருத்தத்தை அளிக்கின்றது."

### என்ன நோக்கம் என்பது புரியவில்லை

முன்னாள் மத்திய விவசாய அமைச்சர் திரு. ஜெகஜீவன் ராமின் ராஜினமா குறித்துப் பிரஸ்தாபித்த திருமதி காந்தி "இவரது ராஜினமா ஏதேனும் நலனை அடிப்படையாகக் கொண்டதா அல்லது மக்கள் நலனை அடிப்படையாகக் கொண்டதா? என்பது எனக்குப் புரியவில்லை" என்றார்.

### வன்முறைக்கு இடமில்லை

"பொதுத் தேர்தல் வேளையில் வன்முறை தூண்டப்பட்டால் அதனை அரசாங்கம் பார்த்துக்கொண்டு வாளாவிருக்காது" என்றும் திருமதி காந்தி வலியுறுத்திக் கூறினர். (உ)

......

### கொரியா உறவு

நியூயோர்க், பெப். 6

தென் கொரியாவுக்கும், வட கொரியாவுக்குமிடையில் படிப்படியாகச் சுமுகநிலை மலர்ந்து வருவதாகக் கொரிய ஜனநாயகக் குடியரசு ஐ. நா. சபைக்கு அனுப்பிவைத்துள்ள அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளது.

ஆனல் இரு சாராருக்கும் ஏதாவது பேச்சுவார்த்தைகள் நடைபெற்று வருகிறதென்பது பற்றி இதில் எதுவும் பிரஸ்தாபிக்கப்படவில்லை.

இரு சாராருக்கும் மத்தியில் அரசியல் சித்தாந்தக் கருத்துக்களில் முரண்பாடு நிலவிவருவது தெரிந்ததே. (உ)

### ஜனநாயக உரிமை

அடிஸ் அபாபா, பெப். 6

"எதியோப்பியாவில் ஜனநாயக உரிமைகள் நிலைநாட்டப்படும்" என்று எதியோப்பியாவின் புதிய தலைவரான திரு. மரியம் உறுதியளித்திருக்கிறார்.

இராணுவமும், தொழிற்கட்சியும் இணையவேண்டும். அந்த அடிப்படையிலேயே நாட்டின் நிர்வாகம் நடைபெறவேண்டுமென்றும் அவர் கூறியிருக்கிறார்.

இதேவேளை கடந்த மூன்று தினங்களாக எதியோப்பியாவில் நிலவிய கொந்தளிப்பு நிலை நீங்கி, அங்கு நிலைமை சீரடைந்துவிட்டதாக அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

எதியோப்பிய இராணுவ ஆட்சித் தலைவரும் மற்றும் ஆறு இராணுவ அதிகாரிகளும் அண்மையில் நடைபெற்ற புரட்சிச் சதியையடுத்துத் தூக்கிலிடப்பட்டனர் என்பது தெரிந்ததே.

### ஐ.நா. செயலாளர் கருத்து

டமாஸ்கஸ், பெப். 6

மத்திய கிழக்கு விவகாரம் தொடர்பாக ஐக்கிய நாடுகள் சபை பொதுச் செயலாளர் கலாநிதி வால்ட்ஹெய்ம் சிரிய ஜனதிபதி அஸாத்துடன் டமாஸ்கஸில் பேச்சுவார்த்தைகள் நடத்தியுள்ளார்.

மத்திய கிழக்கு விவகாரம் தொடர்பாகமீண்டும் ஜெனிவா மாநாடு கூட்டப்படுவதற்குரிய சாத்தியக் கூறுகள் பற்றி இப் பேச்சுவார்த்தைகளின்போது ஆராயப்பட்டதாக அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

இவ்விவகாரத்தில் சமரஸ நிலை ஏற்பட அமெரிக்கா, சோவியத் யூனியன் உட்பட சகல நாடுகளும் தீவிர ஆர்வம் காட்டவேண்டுமென கலாநிதி வால்ட்ஹெய்ம் லெபனன் பத்திரிகைக்கு அளித்த பேட்டி ஒன்றில் கூறியிருக்கிறார். இதேவேளை, பலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் யாசர் அரபாத் கலாநிதி வால்ட்ஹெய்முடன் பேச்சுவார்த்தை நடத்த டமாஸ்கஸ் வந்துள்ளார். (உ)

---

### அணு ஆயுத ஒப்பந்தம்

மாஸ்கோ, பெப்ரவரி 6

அமெரிக்காவும், சோவியத் யூனியனும் ஆயுதம் பேரம் பேசுதலை தவிர்த்துக் கொள்ளும் வகையில் அணு ஆயுதக்கட்டுப்பாட்டு ஒப்பந்தம் ஒன்றினை செய்து கொள்ள வேண்டுமென மாஸ்கோ தினசரியான 'பிராவ்டா' வலியுறுத்தியுள்ளது.

இருநாடுகள் பற்றியும் உள்ள பிரச்னை இதனால் தீரும் என்று இத் தினசரி மேலும் கூறியுள்ளது. (உ)

## புரட்சியில் தோற்றவனுக்கு ச.அரேபியா, சூடான் உதவி?

அடிஸ் அபாபா, பெப். 6

எதியோப்பியாவில் கடந்த வியாழனன்று இடம்பெற்ற சதிப்புரட்சியில் தோல்வி கண்டவர்களுக்கு சூடானும் சவூதி அரேபியாவும் உதவியுள்ளன என்று எதியோப்பிய புதிய இராணுவ ஆட்சி தலைவர் லெப்டினன்ட் கேணல் மெங்கிஸ்து மரியம் தெரிவித்துள்ளார். புரட்சி நடைபெற்ற வேளை கேணல் மரியம் இராணுவத்தின் முதலாவது உதவித் தலைவராக இருந்துவந்தார். (இ)

## இந்திய தேர்தல் அரங்கு

### வழிபடும் இடங்களில் பிரசாரம் வேண்டாம்

கோவில்கள், ஆலயங்கள், போன்ற வழிபாட்டு இடங்களை தேர்தல் பிரசாரத்துக்கோ பிரசாரக்கூட்டங்களை நடத்துவதற்கோ பாவிக்கவேண்டாம் என்று அரசு அறிவித்துள்ளது. ஒரு கட்சியின் ஊர்வலம்போகும்போது அதே பாதையால் வேறு கட்சி ஊர்வலங்களைச் செல்லவிடவேண்டாம் என்றும் மாற்றுக் கட்சி சுவரொட்டிகளை அகற்றவேண்டும் என்றும் அரசு கேட்டுள்ளது.

### செவ்வாய் அ. அ. தி. மு. க அபேட்சகர்கள் தெரிவு

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்கழக செயற்குழு எதிர்வரும் செவ்வாய்க்கிழமை சென்னையில் கூடி தன்து லோகசபைத் தேர்தலுக்கான அபேட்சகர்களை இறுதியாகத் தெரிவுசெய்யும்.

### தமிழ்நாட்டுத்தெரிவு பிரதமரிடம் ஒப்படைப்பு

தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் அபேட்சகர்களை தெரிவு செய்யும் பொறுப்பு பிரதம மந்திரி திருமதி இந்திராகாந்தியிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது என்றும் அதற்கான யோசனை பிரதமருக்கு ஏற்கனவே அனுப்பப்பட்டுள்ளது என்றும் தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் திரு கறுப்பையா மூப்பனர் தெரிவித்துள்ளார்.

### தி. மு. க. அபேட்சகர் வியாழன் அறிவிக்கப்படும்

திராவிட முன்னேற்றக்கழகம் தனது அபேட்சகர்களின் பெயர்களை எதிர்வரும் வியாழக்கிழமை வெளியிடும் என்றும் கழகத்தின் தலைமைப்பீடம் தெரிவித்துள்ளது.

அவசரகால விதிகளை உடனடியாக நீக்குமாறு பாரத முன்னாள் ஜனதிபதி திரு. வி. வி. கிரி பாரதப்பிரதமர் திருமதி இந்திரா காந்திக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார். பொதுத் தேர்தல் நடைபெறவிருப்பது குறித்து திருமதி காந்தி அறிவித்த வேளையிலோ, ஜெயப்பிரகாஷ் நாராயண் முதலான அரசியல் வாதிகள் தடுப்புக்காவலில் இருந்து விடுதலை செய்யப்பட்ட நேரத்திலோ கூட எதுவித அபிப்பிராயமும் கூறாது மௌனம் சாதித்து வந்தார் திரு. கிரி என்பது குறிப்பிடத்தக்கது.

ஃ ஃ ஃ

### "செயல்முறை சோஷலிஸத்திற்கு உழைப்பேன்"

"செயல்முறை சோஷலிஸத்திற்காகத் தமது கட்சி பாடுபடும்" என்று காங்கிரஸ் கட்சியில் இருந்து விலகியுள்ள முன்னாள் விவசாய அமைச்சர் திரு. ஜெகஜீவன்ராம் கூறியுள்ளார். அவர் ஜனதா கட்சித்தலைவர்களில் ஒருவரான திரு. ஜெயப்பிரகாஷ் நாராயணனுடன் பேச்சுவார்த்தை நடத்தியிருக்கிறார்.

### "ஜாயடைக்கச் செய்தார் இந்திரா"

"இனிமேல் இந்தியாவில் தேர்தலே கிடையாது இந்திராவே ஆளுவார். அவருக்குப் பின் அவருடைய பரம்பரைக்கு ஆட்சியைக் கொடுத்துவிட்டுப்போய் விடுவார் என்று பேசிவந்தவர்கள் இன்று வாயடைத்துப்போகும்படி எமது பிரதமர் திருமதி இந்திராகாந்தி செய்துள்ளார்" என்று மத்திய நிதி அமைச்சர் திரு. சி. சுப்பிரமணியம் சென்னையில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் பேசுகையில் கூறினர்.

காங்கேசன் சிமெந்துத் தொழிற்சாலையில்

## லொறிக்காரர் ஆர்ப்பாட்டம்

### பொலிஸார் தலையிட்டு நிறுத்தினர்

மாவிட்டபுரம், ஞாயிறு

காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலையில் வரிசை முறையில் லொறிகளுக்கு சிமெந்து வழங்குவதில் ஒழுங்கீனம் இடம்பெற்றதாகத் தெரிவித்து லொறிக்காரர்களும், சிமெந்து உபயோகிப்பாளர்களும் நடத்திய ஆர்ப்பாட்டம் பொலிசாரின் தலையீட்டால் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது.

காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலையில் இதுவரை காலமும் "கியூ" வரிசையின் படியே லொறிகளுக்கு சிமெந்து விநியோகம் நடைபெற்று வந்தது. ஆனல் கடந்த சில நாட்களாக "கியூ"முறையை விடுத்து ஒழுங்கீனமானமுறையில் சிமெந்துவிநியோகம் நடைபெற்று வந்ததாகவும் ஏராளமான லொறிக்காரர்கள் பல நாட்களாகக்காத்திருந்து ஏமாற்றமடைந்ததுடன் பாவனையாளர்களும் சிமெந்துபெறமுடியாது கஷ்டப்பட்டு வந்ததாகவும் கூறப்பட்டது.

இந்த ஒழுங்கீனத்தை ஆட்சேபித்து வெள்ளியன்று லொறிக்காரர்களும், பாவனையாளர்களும் மேற்படி தொழிற்சாலையில் சிமெந்து விநியோகம் நடைபெறுவதைத் தடுக்குமுகமாக ஆர்ப்பாட்டம்செய்தனர். இதையடுத்து ஸ்தலத்துக்கு விரைந்த காங்கேசன்துறைப் பொலிசார் நிலைமையைச் சமாளித்து 7ம் திகதி திங்கட்கிழமை தொடக்கம் மேற்படி ஒழுங்கீனங்கள் இடம்பெறுமல் சிமெந்து விநியோகிக்க ஏற்பாடுகள் செய்யப்படும் எனத்தெரிவித்து ஆர்ப்பாட்டத்தை முடிவுக்குக் கொண்டுவந்தனர்.

இதற்கிடையில் 61 லொறி உரிமையாளர்களும், பாவனையாளர்களும் சேர்ந்து கைத்தொழில் அமைச்சருக்கு மகஜர் ஒன்றையும் அனுப்பியுள்ளனர்.

கொழும்பு தலைமைக் காரியாலயத்தினால் வழங்கப்படும் உத்தரவும் பத்திரமுள்ள யாழ். மாவட்ட லொறிகளுக்கு சிமெந்து விநியோகிக்க மறுப்பதுடன் யாழ் மாவட்ட உதவி அரசாங்க அதிபரினால் சிபார்சுசெய்யப்பட்ட விண்ணப்பங்களையும் காங்கேசன் சிமெந்து தொழிற்சாலையினர் இழுத்தடித்து வருவதாகவும் இதேநேரத்தில்வெளியிடங்களிலிருந்துவரும் லொறிகளுக்கு உடனுக்குடன் சிமெந்து வழங்கப்படுவதாகவும்சுட்டிக்காட்டி இந்த அநிலையைப் போக்குமாறு அம்மகஜரில் கோரப்பட்டுள்ளது.

இம்மகஜரின் பிரதிகள் காங்கேசன்துறை தேசிய அரசுப் பேரவை உறுப்பினர், யாழ். அரசாங்க அதிபர் மற்றும் அதிகாரிகளுக்கும் அனுப்பப்பட்டுள்ளன. (அ)

## எண்ணெ ஏற்றுமதி: சவூதி அரேபியா எச்சரிக்கை

பாரிஸ், பெப். 6

ஈரானின் எண்ணெய் ஏற்றுமதி குறையக்கூடியவாறு சவூதி அரேபியா மிதமிஞ்சி எண்ணெய்உற்பத்தி செய்தால் அது ஈரானுக்கு எதிரான ஒரு ஆக்கிரமிப்பாகக்கருதப் படும் என்று ஈரான் மன்னர் ஷா கடந்த இரவு பிரெஞ்சு டெலிவிஷன் நிருபருக்கு அளித்தபேட்டியில் கூறினர். உலக எண்ணெய் சந்தையின் தற்போதைய விலைகளை நேசநாடுகளும் எண்ணெய் உற்பத்தி செய்யும் நாடுகளில் பெரும் பாலானவை அவற்றின் ஏற்றுமதியை 25 சதவீதம் குறைத்துக் கொண்டுள்ளநிலையில் தோன்றலாம் என்று சவூதி அரேபியாவின் எண்ணெய் அமைச்சர் ஷேக் அகமது ஸாகியமானி அண்மையில் கூறியதுகுறித்துஈரான்மன்னரிடம் கேட்டபோது அது சாத்தியம் தான் என்று பதிலளித்தார்.

ஈரானுக்கும் சவூதிஅரேபியாவுக்கும் இடையில் அரசியல் ரீதியாகவோபொருளாதாரரீதியாகவோ தற்போது போட்டி எதுவும் கிடையாது என்றும் மன்னர் ஷா தொடர்ந்து கூறினர். [உ]

---

### அல்லிஸ் திறந்து வைப்பார்

யாழ்ப்பாணம், திங்கள்

சுமார் பதினெரு இலட்சம் ரூபா செலவில் கன்னாகம் பட்டின சபையினல் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள சுன்னாகம் மத்திய சந்தையின் இரண்டு மாடிக் கட்டடத்தை எதிர்வரும் 9ம் திகதி புதன்கிழமை மாலை உள்ளூராட்சி ஆணையாளர் திரு. அல்லிஸ் திறந்து வைக்கவிருக்கிறார்.

மேற்படி பட்டணசபைத் தலைவர் திரு. பொ. நாகலிங்கம் இத்திறப்புவிழாவுக்குத்தலைமை தாங்குவார். (உ)

Regal
Jaffna

Daily at 4-45, 7-00 & 9-30 P. M.
CAROL WHITE
JOHN MILLS
in
DULCIMA
(color)

RIO (Jaffna)
Daily 10-30, 4-45, 7-15, 9-45
Walter Defends Sarajevo

From Tomorrow
BLOOD CREATURES
(Horror Film)

ஸ்ரீதர்
(யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர். - மஞ்சுளா
சந்திரகலா - லதா
நடித்த
உலகம் சுற்றும் வாலிபன்
(ஈஸ்ட்மன் கலர்)

ராஜா
யாழ். நகர்
தினசரி 4 காட்சிகள்
5-வது வெற்றி வாரம்
ஜெய்சங்கர் - நிர்மலா
நடித்த
தாய்க்கு ஒரு பிள்ளை

வெலிங்டன் (யாழ். நகர்)
தினசரி 3 காட்சிகள் சனி, ஞாயிறு 4 காட்சிகள்
ஜெமினி - கே. ஆர். விஜயா
சுந்தரராஜன் — ஏ. வி. எம். ராஜன்
நடித்த
தெய்வம்

லிடோ [யாழ். நகர்] போன்: 7693
ஏ. வி. எம். ராஜன்-லதா
நடித்த
வீட்டுக்கு வந்த மருமகள்

மனோகரா
(யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
HOUSE FULL HOUSE FULL
HOUSE FULL
நகரில் இப்படி ஒரு சிறந்தபடம்
இதுவரை வந்ததில்லை என்பதே
பார்த்தவர்களின் தீர்ப்பு!
மக்கள் திலகம்
எம். ஜி. ஆர்.
கட்டழகி
ராஜசுலோசனா
வெண்ணிற ஆடை
நிர்மலா
பி. எஸ். வீரப்பா
நடித்த
சத்யா மூவிஸ்



இதயக்கனி (ஈஸ்மன்கலர்)
தொடர்ந்து H. FULL காட்சிகளாகச் சாதிக்கவிருக்கும் கொண்டிருப்பதால் காட்சிகள் குறிப்பிட்ட நேரத்துக்கு முன்னரே ஆரம்பிக்கப்படும்.
இசை: M. S. விஸ்வநாதன் டைரக்ஷன்: A. ஜகந்நாதன்


# "பாலர் கல்வித் திட்டத்தை நன்கு பயன்படுத்தவேண்டும்"

## சிறுவர் பாடசாலைத் திறப்பு விழாவில் ப. ச. தலைவர்

சங்கானை, ஞாயிறு

"பின்தங்கிய பகுதிகளின் அபிவிருத்தித் திட்டத்தில் மையக் கல்விக்கென அரச கோட்பாடுகளையே பணத்தைச் செலவிட்டு வருவது எதிர்கால சந்ததியினரின் அரச கொள்கையின் அக்கறையை எடுத்துக் காட்டுவதாகும். இத்திட்டத்தின் அடிப்படையிலேயே நாடு பூராவும் உள்ளூர் ஆட்சிமன்றத்தின் அனுசரணையுடன் ஆங்காங்கே சிறுவர் பாடசாலைகள் விஸ்தரிக்கப்பட்டு வருகின்றன. இது எமது பகுதி சிறுவர்களுக்கும் நல்ல வாய்ப்பாக அமைந்துள்ளது. இதனை நன்கு பயன்படுத்திக்கொள்ள பெற்றோர் தமது ஏகோபித்த ஒத்துழைப்பை நல்க வேண்டும்."

இவ்வாறு சங்கானைப் பட்டினசபைத் தலைவர் திரு. எஸ். கே. திருச்சிற்றம்பலம் சபையின் 4-ம் வட்டாரமான நிற்சாமத்தில் முருகமூர்த்தி கோவிலுக்கு அருகாமையில் அமைந்துள்ள சரஸ்வதி சனசமூக நிலைய மண்டபத்தில் சிறுவர் பாடசாலையைச் சம்பிரதாய முறைப்படி ஆரம்பித்து வைத்துப் பேசுகையில் கூறினார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

"இப்பகுதிக்கான மின் விநியோகம், வீதி விஸ்தரிப்பு முதலியவற்றில் பாகுபாடற்ற முறையில் எமது நிதி நிலைமைக்கேற்ப உதவி புரிய எமது பட்டினசபை தயங்காது. பல நாம்பட்ட அபிவிருத்தித் திட்டங்கள் செயற்பட நிதி பற்றாக்குறை காரணமாக வசதிகளும் கட்டப்பட்டுள்ளது. இதனை பொதுமக்கள் மனமுவந்து ஏற்பதால் எமது கிராம வளர்ச்சிக்கும் பல முன்னேற்றமான திட்டங்களை நிறைவேற்ற ஏதுவாகும்" என்றார்.

4-ம் வட்டார முன்னாள் உறுப்பினர் எம். கணேஷ் நன்றி தெரிவித்துப்பேசினார். 3-ம் வட்டார உறுப்பினர் திரு. சி. செல்லத்துரை, 5-ம் வட்டார உறுப்பினர் திரு. எஸ். இராசா கட்பட மற்றும் பட்டினசபை உறுப்பினர்கள், ஆசிரியர் போ. இளங்கோ முதலானோர் பலர் உரையாற்றினர். பட்டினசபையால் ஆரம்பிக்கப்பட்ட இரண்டாவது பாலர்பாடசாலை இதுவாகும். இதனைத் தொடர்ந்து பட்டினசபை எல்லைக்குள் இன்னும் சில பாலர் பாடசாலைகள் திறப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (அ)


பிகாரில் சம்பவம்
இளைஞர் காங்கிரஸ் தலைவர் கொலை
புதுடில்லி, பெப். 6
பீகார் இளைஞர் காங்கிரஸ் தலைவர் ஒருவர் சுட்டுக் கொலை செய்யப்பட்டுள்ளார்.
இந்தக்கொலை தொடர்பாக மார்க்ஸீய கம்யூனிஸ்கட்சி ஊழியர் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். வேறு சிலர் தேடப்படுகின்றனர்.


# மூளாயில் 60 சதமாக பாண் விற்கப்பட்டது

வட்டுக்கோட்டை, ஞாயிறு

மூளாய்ப் பகுதியில் உள்ள பேக்கரி ஒன்றில் திடீர் பரிசோதனைசெய்த யாழ். விலைக் கட்டுப்பாட்டுப் பரிசோதகர்கள் அந்தபேக்கரியில் இருந்த பாண்களை எடுத்து ஒவ்வொன்றும் அறுபதுசத வீதம் பொதுமக்களுக்கு விற்பனைசெய்தனர்.

மேற்படி பேக்கரியில் இருந்த பாண்கள் நிறைகுறைவாக இருக்கக்கண்ட பரிசோதகர்கள் 12 அவுன்ஸ்நிறைக்கு ஏற்றவிலையில் இவற்றை 60 சதமாக விற்பனை செய்தனர்.

யாழ். அரசாங்க செயலகக் காரியாலய உதவியாளர் திரு. வேலுப்பிள்ளையின் தலைமையில் சென்ற விலைக்கட்டுப்பாட்டுப் பிரிவு பரிசோதகர்கள் திரு. நா. அருளானந்தம், திரு. எஸ். சண்முகம், திரு. ரி. சிதம்பரநாதன் ஆகியோர் இத்திடீர் பரிசோதனைகளில் ஈடுபட்டனர்.

இதே தினம் வட்டுக்கோட்டைப் பகுதியிலும் இவர்கள் பல பேக்கரிகளில் திடீர் பரிசோதனைகளை நடத்தினர். இதனுள் குற்றங்கள் புரிந்த பேக்கரிகள் பலவற்றின் மீது வழக்குகள் பதிவுசெய்யப்பட்டுள்ளன. [அ]

# இளம் சு. கட்சி எம். பிக்கள் புதிய கட்சி அமைப்பார்களா?

கொழும்பு, ஞாயிறு

இரத்தினபுரி எம். பி. திரு. நந்தா எல்லாவலவின் தலைமையிலான இளம் சுதந்திரக்கட்சி எம். பீக்கள் புதிய அரசியல் கட்சி ஒன்றை ஆரம்பிப்பார்களா? என்ற கேள்வி அரசியல் வட்டாரங்களில் எழுந்துள்ளது.

அரசாங்கக் கட்சிப் பாராளுமன்றக் குழுக் கூட்டத்தில் சில சுதந்திரக்கட்சி எம். பீக்கள் கலந்து கொள்ளாததைத் தொடர்ந்து இக்கேள்வி எழுந்துள்ளது. இந்த எம். பீக்கள் அண்மையில் நடந்த வேலைநிறுத்தத்தை ஆதரித்தவர்களாகவோ, அனுதாபம் தெரிவித்தவர்களாகவோ உள்ளனர் என அரசியல் வட்டாரங்கள் கூறுகின்றன.

அரசாங்கக் கட்சிப் பாராளுமன்றக் குழுக் கூட்டத்திற்கு திரு. நந்தா எல்லாவல (இரத்தினபுரி), திரு. ரோனி சில் எதிரிசூரிய (திஸ்ஸமகாராம), திரு. ஏ. எம். ஜினதாச (கெக்கிராவ), திரு. சேமினி ஆரியதிலக (மஸ்கெலியா) ஆகியோர் சமுகமளிக்கவில்லை.

இந்தக் குழுவில் பொலிகாவல எம். பி. திரு. கைத்திபால ஜெயரத்னம் அடங்குவாரென அரசாங்கக் கட்சி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அரசு மீது நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை எதிர்க்கட்சியினர் கொண்டுவரவிருக்கும் பெப்ரவரி மாதம் 17ந் திகதி புதிய அரசியல் கட்சியொன்று உருவாகலாமெனப் பேசப்படுகின்றது.

# பிரிட்டனுக்கு நேசக்கரம் நீட்டுகிறார் இடி அமீன்

லண்டன், பெப். 6

உகண்டா பிரிட்டனுடன் ராஜதந்திர உறவுகளை மீண்டும் ஏற்படுத்திக்கொள்ளத் தயாராக இருக்கிறது என்று உகண்டா ஜனாதிபதி இடி அமீன் கூறியிருக்கிறார்.

உகண்டாவுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள பிரிட்டிஷ் இராணுவ மேஜரை இடி அமீன் சந்தித்துப் பேசுகையில் தமது இவ்விருப்பத்தைத் தெரிவித்தார்.

லண்டனிலேயே விசாரணை நிலையத் தாக்குதலையடுத்து எழுந்த குற்றச்சாட்டையடுத்து பிரிட்டன் உகண்டாவுடனான உறவுகளைத் துண்டித்துக்கொண்டது தெரிந்ததே. (உ)

# கொழும்புக்கார் மீசாலை வாசியின் உயிரைக்குடித்தது

யாழ்ப்பாணம், திங்கள்

மீசாலையில் நடைபெற்ற கார்விபத்து ஒன்றில் 75 வயது வயோதிபர் மரணமானார்.

இவ்விபத்தில் மரணமானவர் க. சின்னத்தம்பி என்பவராவார். தெகிவளைக் கோது வேட்சாது என்னும் சகபல தினத்தன்று முற்பகல் கொழும்பில் இருந்து கண்டியிலிருந்து வடக்கே வந்துகொண்டிருந்தகார் ஒன்றிலும் இவர் மீசாலையில் வைத்து மோதப்பட்டதாகவும் தெரிகிறது.

யாழ். பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட சின்னத்தம்பி அங்கு மரணமானார்.

இதுபற்றி மரணவிசாரணை நடத்திய யாழ். திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. எஸ். எஸ். பிரான்சிஸ் பிரேத பரிசோதனைக்கு உத்தரவிட்டு தீர்ப்பு வழங்குவதை பின் போட்டார்.

காரின்சாரதியை நிலநாயகம் என்பவரை 1000 ரூபா பிணையில் செல்லுமாறு அவர் பணித்தார். (உ)


புலோலி சினிமாஸ்
(பருத்தித்துறை)
தினசரி 4-30, 7-00, 9-30
சனி, ஞாயிறு 10-30.
DON'T LOOK NOW

நாகம்மா
(கன்னுகம்)
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
சிவாஜி - சரோஜாதேவி
பாலும் பழமும்

வெல்லி (சாவகச்சேரி)
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
சிவாஜி—சாவித்திரி
படித்தால் மட்டும் போதுமா?

வின்ஸர் (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
★ கமலஹாசன் ★ ஸ்ரீவித்யா
★ சுந்தரராஜன் ★ ஜெயசுதா ★ நாகேஷ்
நடித்த K. பாலசந்தரின்
அபூர்வ ராகங்கள்

ராணி
[யாழ்-நகர்]
❖ ஜெமினி ❖ பத்மினி
❖ பாலையா ❖ தங்கவேலு
நடித்த
தினசரி 4 காட்சிகள்
மல்லிகா
புதிய பிரதி

